1967 ஜூலை 13]

நில உச்சவரம்பு--

முற்பகல் 10-00

*308 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. கரு. சீமைச்சாமி :
திரு கே. ஆர். ஞானசம்பந்தன் :
மதிப்பிற்குறிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) நில உச்சவரம்பு சட்டம் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது ?

(இ) அது எப்போது அமுல் படுத்தப்பட்டது ?

(உ) அதன் மூலம் கிடைத்த மிச்ச நிலம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் (தமிழகச் சட்டம் 58/1961) 1962-ம் ஆண்டு மே திங்களில் தமிழக அரசிதழில் வெளியாயிற்று.

(இ) இது 6-4-1960-ல் இருந்தே பயன் தரும் வகையில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (இது மூல மசோதா வெளியிடப்பட்ட தேதியாகும்.)

(உ) 1-3-1967-ல் இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம் 24,351 ஏக்கர் ஆகும். (நன்செய் 9,167 ஏக்கர், புன்செய் 15,184 ஏக்கர்).

*309 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா.

கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

*310 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை நில உடைமை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக கிடைத்த நிலங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN (*a*) Yes.

(*b*) The Madras Land Reforms (Compensation for surplus Land) Rules, 1966, which were placed on the table of the House on 27th March 1967 provide the mode of payment of compensation bonds.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கிடைத்த மிச்ச நிலங்களை எந்த எந்த விவசாயிகளுக்கு தொழிலாளர்களுக்கு எந்த அளவு பங்கிடு செய்யப்பட்டிருக்கிறது ? இல்லை என்று சொன்னால் எப்போது? எந்த அடிப்படையில் விநியோகம் செய்வதாக உத்தேசம் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மொத்தம் 23 ஆயிரம் ஏக்கராவில் 16 ஆயிரம் ஏக்கரா தான் சுவாதீனப்படுத்தப்பட்டது நம் அரசாங்கத்தால். அவற்றில் 14,546 ஏக்கராக்கள், 6,770 விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.